OS.13/2020
Dated. 04.01.2024
Name :  திரு.சின்ன குருசாமி(PW2)
Time: 01.10 PM

<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:–

1. கோட்டை ஈஸ்வரன் என்பவர் கரிகாலன் மீது சொத்து சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்துள்ளார்.  நான் கூறிய விபரங்களின் அடிப்படையில் தான் நிரூபண வாக்குமூலம் தயார் செய்யப்பட்டுள்ளது.

2. தாவா சொத்துக்கள் கோட்டை ஈஸ்வரனுக்கு பாத்தியப்பட்டது.  தாவா சொத்து பூர்வீக சொத்து என்பதால் கிரைய பத்திரம் என்னிடம் காட்டவில்லை. தாவா சொத்தை 15 வருடங்களாக வாதி அனுபவம் செய்து வருகிறார் என்பதன் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

3. தாவா சொத்தின் பட்டா 1, 2 பிரதிவாதிகளின் தகப்பனார் நல்லகுட்டி தேவர் பெயரில் இருந்தது.  எனக்கு 70 வயதாகிறது.  நான் விவசாய கூலி வேலை செய்து வருகிறேன்.  எங்கள் சொத்தை விற்பனை செய்துவிட்டோம். பசும்பொன் கிராமத்தில் எனக்கு விவசாயம் நிலம் இருந்து நான் விவசாயம் செய்து வருவதாக நிரூபண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள விபரங்களுக்கு முரண்பட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4. கோட்டை ஈஸ்வரனின் அப்பா பெயர் நிறைகுளத்து அய்யனார் அவரது அம்மா பெயர் ஞாபகத்தில் இல்லை.  வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகள் பங்காளி உறவுமுறை.  வாதி தொடர்ந்து விவசாயம் செய்து வருவதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.  அவர் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார் என்றால் சரிதான். அவர் எந்த ஊரில் பணிபுரிந்து வருகிறார் என்று எனக்கு தெரியாது.

5. தாவா சொத்துக்கள் பசும்பொன் கிராமத்தில் உள்ளது.  தாவா சொத்துக்களின் சர்வே எண் எனக்கு தெரியாது.  சார் பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றுள்ளேன்.  வாதிகளின் தாத்தா மற்றும் பிரதிவாதிகளின் தகப்பனாருக்கு இடையில் பாகம் ஏற்பட்டுவிட்டது.

6. தாவா சொத்தை குறித்தும் பாகம் ஏற்பட்டுவிட்டது.  எந்த வருடம் பாகம்

பிரித்தார்கள் என்று எனக்கு ஞாபகமில்லை. வாதிகள் என்னென்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார்கள் என்று எனக்கு தெரியாது.

7. வழக்கு விபரம் குறித்து கடந்த 3 ஆண்டுகளாக எனக்கு தெரியும். வாதியின் தாத்தா தவசியண்ணத்தேவர் இறந்த போது எனக்கு 25 வயது இருக்கும். 21.03.1967 ம் தேதியன்று பாகம் ஏற்பட்டதாக ஆவணம் உள்ளதாக கூறியுள்ளது குறித்து எனக்கு தெரியுமா என்றால் பாகம் பிரித்த விபரம் தெரியும். ஆவணம் குறித்து தெரியாது. பாகம் பிரித்து கொண்ட விபரம் எனக்கு நேரடியாக தெரியும்.

8. குறைவான சொத்துக்கள் வாதியின் தாத்தாவிற்கு ஒதுக்கப்பட்டதாக வாதியின் தாத்தாவோ, வாதியின் தகப்பனாரோ வழக்கு தாக்கல் செய்யவில்லை.

9. எனக்கு இவ்வழக்கு குறித்து எந்த விபரமும் தெரியாது என்றும் வாதி கேட்டு கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(S/d. ஜெ. சங்கீதா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.